**Advertisement. No. 343**

# TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

## ADMISSION TO THE RASHTRIYA INDIAN MILITARY COLLEGE, DEHRADUN, JANUARY - 2014 TERM - EXAMINATION TO BE HELD ON 1ST AND 2ND JUNE 2013.

The next examination for admission to the Rashtriya Indian Military College, Dehradun, January-2014 term, will be held on 1st and 2nd June 2013 at selected centres in the country of which Chennai city will be one. The examination will consist of both written and Viva-voce tests. The written examination will consist of three papers viz. English, Mathematics and General Knowledge. The medium of Examination will be in English or Hindi for the subjects Mathematics and General Knowledge. The interview will be held to test the intelligence, personality etc., of the candidates. The interview shall be held on **07.10.2013** only for the candidates who qualify in the written examination and the time and venue for the interview will be intimated to them later. Minimum pass marks in each paper including interview will be 50%.

2. Application forms and copies of prospectus with set of old question papers for the above examination can be obtained from the Commandant, Rashtriya Indian Military College, Dehradun, Uttarkhand by sending D.D. for the Value of Rs.400/- (for Registered Post) or Rs.450/- (for Speed Post) for General candidates and Rs.355/- (for Registered Post) or Rs.405/- (for Speed Post) for SC/ST candidates along with caste certificates drawn in favour of the Commandant, Rashtriya Indian Military College, Dehradun, payable at State Bank of India -Tel. Bhawan Branch, Dehradun (Code – 01576). **The application form and prospectus will not be supplied to the candidates from the Office of the Tamil Nadu Public Service Commission, Chennai. Locally printed / Xeroxed and without RIMC Hologram (Seal) forms will be rejected.**

3. Those seeking admission to the College should not be less than 11 ½ years of age and should not have attained the age of 13 years as on 1st **January - 2014** (They should have been born not earlier than 02nd **January 2001** and not later than 1st July 2002). No relaxation of age limit will be allowed. The candidates should either be studying in Class VII or passed Class VII from any recognised School, at the time of admission in Rashtriya Indian Military College. (i.e., on **1st January 2014**)

4. Filled-in- applications in the prescribed form in duplicate from the candidates (Boys only) whose parents or guardians RESIDE IN TAMIL NADU should reach the Controller of Examinations, Tamil Nadu Public Service Commission, Frazer Bridge Road, V.O.C., Nagar, Chennai-600 003 not later than 5.45 p.m. on **31.03.2013.** The details are also available in the Commission's website www.tnpsc. gov. in

CONTROLLER OF EXAMINATIONS

**விளம்பர எண்.343**

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

டேராடுனில் உள்ள இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரியில் 2014 ஜனவரி பருவத்தில் சேருவதற்கான 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 மற்றும் 2 ஆம் தேதிகளில் நடத்தப்பெறும் தேர்வு.

டேராடுனில் உள்ள இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரியில் ஜனவரி 2014 பருவத்தில் சேருவதற்கான அடுத்த தேர்வு இந்திய நாட்டில் குறிப்பிட்ட சில இடங்களில் 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 மற்றும் 2 ஆம் தேதிகளில் நடைபெறவிருக்கிறது. சென்னை நகரிலும் இத்தேர்வு நடைபெற உள்ளது. இத்தேர்வு எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகிய இரண்டும் கொண்டதாக இருக்கும். எழுத்துத் தேர்வு, ஆங்கிலம், கணக்கு மற்றும் பொதுஅறிவு ஆகிய தாள்கள் கொண்டது. கணக்குத்தாள் மற்றும் பொது அறிவுத் தாள் ஆகியன ஆங்கிலத்தில் அல்லது இந்தியில் விடையளிக்கப்பட வேண்டும். நேர்முகத் தேர்வானது விண்ணப்பதாரர்களின் அறிவுக் கூர்மை, தனித்தன்மை போன்றவற்றை ஆராய்வதாக இருக்கும். எழுத்துத் தேர்வின் அடிப்படையில் தகுதியானவர் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு மட்டும் **07.10.2013** அன்று நடைபெற உள்ள நேர்முகத் தேர்வு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். ஒவ்வொரு பாடத்திலும் தேர்வு பெற நேர்முகத் தேர்வு உட்பட குறைந்தபட்ச மதிப்பெண் 50 விழுக்காடு ஆகும்.

இத்தேர்விற்கான விண்ணப்பப்படிவம், தகவல் தொகுப்பேடு மற்றும் முந்தைய தேர்விற்கான வினாத்தாள் தொகுப்பை கமாண்டன்ட், இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரி, டேராடுன், உத்ரகாண்ட் மாநிலம் என்ற முகவரிக்கு விண்ணப்பித்து, கமாண்டன்ட், இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரி, டேராடுன் அவர்களுக்கு ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா கிளை டெல் பவன் டேராடுன் ( குறியீட்டு எண் - 01576) வழங்கக்கூடிய பொதுப் பிரிவினர் ரூபாய் 400/-க்கான (பதிவு அஞ்சலுக்காக) அல்லது ரூபாய் 450/-க்கான (விரைவு அஞ்சலுக்காக) மற்றும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினர் சாதிச்சான்றுடன் ரூபாய் 355/-க்கான (பதிவு அஞ்சலுக்காக) அல்லது ரூபாய் 405/-க்கான (விரைவு அஞ்சலுக்காக) கேட்புக் காசோலையைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.. **விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல் தொகுப்பேடு ஆகியன சென்னையிலுள்ள இத்தேர்வாணைய அலுவலகத்திலிருந்து விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படமாட்டாது**. தனிப்பட்ட முறையில் அச்சிடப்பட்ட மற்றும் ஒளிநகல் எடுக்கப்பட்ட இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரி உறாலோகிராம் (Hologram) முத்திரையிடப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பதாரர்களின் (சிறுவர்களின்) பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் தமிழ்நாட்டில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் 01-01-2014 அன்று 11½தி வயது நிரம்பியவராகவும், 13 வயதை அடையாதவராகவும் இருத்தல் வேண்டும். அதாவது அவர்கள் 02-01-2001-க்கு முன்னதாகவும் 01-07-2002-க்கு பின்னதாகவும் பிறந்திருக்கக்கூடாது. இந்த வயது வரம்பில் எந்த தளர்த்தலும் கிடையாது. விண்ணப்பதாரர் மேற்குறிப்பிட்ட இராணுவக்கல்லூரியில் சேர அனுமதிக்கப்படும் பொழுது, (அதாவது 01-01-2014-ல்) அங்கீகரிக்கப் பெற்ற பள்ளியில் (Recognised School) ஏழாம் வகுப்பு படிப்பவராகவோ அல்லது ஏழாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் (இரட்டையாக) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், பிரேசர் பாலச் சாலை, வி,ஓ.சி., நகர், சென்னை-600 003 என்ற முகவரிக்கு 31.03.2013 அன்று மாலை 5.45 மணிக்குள் வந்து சேர வேண்டும். இவ்விவரங்கள் தேர்வாணையத்தின் இணையதளம் www.tnpsc.gov. in. -லும் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர்